### வைக்கம் நகரில் தந்தை பெரியாரின் ‘வைக்கம் போராட்ட நூற்றாண்டு நிறைவு’ - சிறப்பான விழா எடுத்த

# திராவிட நாயகர் முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு மனம் திறந்த பாராட்டு!

## தமிழ்நாடு - கேரள மக்கள் தெரிவித்தனர்!

சென்னை, டிச.16-

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், கேரள மாநில முதலமைச்சர் பினராயி விஜயன் அவர்கள் தலைமையில் வைக்கம் நகரில் தந்தை பெரியார் அவர்களின் வைக்கம் போராட்ட நூற்றாண்டு நிறைவுவிழாவைக் கோலாகலமாகக் கொண்டாடினார். திராவிட நாயகர் அவர்களுக்கு தமிழ்நாடு, கேரள மாநில மக்கள் மனம் திறந்து பாராட்டு தெரிவித்துள்ளனர்.**

**இது குறித்து அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு வருமாறு:-**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றது முதல் சமூக நீதித் தளத்தில் பல



வரலாற்று முத்திரைகளைப் பதித்துள்ளார். அவற்றுள் வைக்கம் போராட்டத்தில் தந்தை பெரியார் அவர்களின் நூற்றாண்டு வெற்றி விழா பல்வேறு பெருமைகளை முதலமைச்சர் அவர்களுக்குத் தேடித் தந்துள்ளது.

தந்தை பெரியார் அவர்கள் பங்கேற்ற வைக்கம் போராட்ட நூற்றாண்டு நிறைவு விழாவை கேரள மாநிலம் வைக்கத்தில் கொண்டாடுவதற்குத் திட்டமிட்டு விழா கொண்டாடி வெற்றி கண்டதுள்ளதன் வாயிலாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திராவிட மாடல் அரசின் கொள்கை வெற்றியை இந்திய நாடு முழுமைக்கும் பறைசாற்றியுள்ளார்.

வைக்கம் போராட்டம் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினர் கோவிலுக்குள் நுழைவதற்காக நடத்திய போராட்டம் அல்ல. கோவில் இருக்கும் தெருக்களில் நடந்து செல்வதற்கு விதிக்கப்பட்டிருந்த தடையை உடைத்தெறிந்த மகத்தான போராட்டம்.

வைக்கம் போரட்ட வெற்றியின் நினைவுச் சின்னமாக வைக்கம் நகரில் தந்தை பெரியார் நினைவகம் கேரள அரசு வழங்கிய 70 செண்டு நிலத்தில் தமிழ்நாடு அரசினால் கட்டப்பட்டது.

இன்று அந்த வைக்கம் போராட்டத்தில் 1924 ஆம் ஆண்டில் தந்தை பெரியார் அவர்கள் பங்கேற்று வெற்றி கொண்ட நூற்றாண்டு நிறைவுவிழா கேரள மாநிலத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் கொண்டாடப் பட்டுள்ளது.

**நினைவகம் புதுப்பிப்பு!**

வைக்கம் நகரில் உள்ள தந்தை பெரியார் நினை வகத்தினைப் புதுப்பித்திட முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ரூ.8 கோடியே 14 இலட்சம் வழங்கினார்.

இந்த நிதியின்மூலம் கேரள மாநில அரசு ஒத்துழைப்போடு வைக்கத்தில் உள்ள தந்தை பெரியார் அவர்களின் கம்பீர மான தோற்றத்துடன் கூடிய சிலை, நினைவம், நூலகம் முதலியவை அழகியலோடு இணைந்த அறிவு கரு வூலமாக புதுப்பிக்கப் பட்டுள்ளது. இந்த நூலகத்தில் 5000க்கும் மேற்பட்ட தமிழ், ஆங்கிலம், மலையாளம் ஆகிய மொழிகளின் புத்தகங்கள் இடம் பெற்றுள்ளன.

**புகைப்படக் கண்காட்சி!**

பெரியார் நினைவகத்தில் புகைப்படக் காட்சிக்கூடத்துடன் திறந்தவெளி அரங்கம், சிறுவர்பூங்கா ஆகியவை இடம் பெற்றுள்ளன.

புதுப்பிக்கப்பட்ட தந்தை பெரியார் நினைவகத்தின் திறப்பு விழா கேரள மாநில முதலமைச்சர் பினராயி விஜயன் தலைமையில் தமிழர் தலைவர் ஆசிரியர் வீரமணி அவர்கள் முன்னிலையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

தமிழ்நாடு, கேரள ஆகிய இரண்டு மாநிலங்களையும் சேர்ந்த பொதுமக்கள் திரளாகக்கூடி இருந்தது சமூகநீதிக் கொள்கைக்கு மக்கள் அளித்துள்ள ஆதரவைப் புலப்படுத்துவ தாக அமைந்திருந்தது. புதுப்பிக்கப்பட்ட பெரியார் நினை வகத்தைத் திறந்துவைக்கும்போது கேரள மாநில முதலமைச்சர் பினராயி விஜயன் அவர்கள் தம்முடைய கரத்துடன் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் கரத்தையும் சேர்த்துவைத்து ரிப்பன் வெட்டிய காட்சி காண்போர் அனைவரையும் நெகிழச்செய்தது. இரு மாநிலங்களின் ஒருங்கிணைப்பையும் ஒத்துழைப்பையும் உறுதிப்படுத்துவதாக அக்காட்சி அமைந்தது.

தமிழ்நாடு முதலைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விழாவில் நிறைவுரை ஆற்றும்போது, “வைக்கம் நூற்றாண்டு விழாவில் பங்கேற்க வாய்ப்புக் கிடைத்ததை வரலாற்றுப் பெருமையாகக் கருதுகிறேன். இந்திய அளவில் ஆளுமைமிக்க தலைவர்களின் ஒருவராக இருக்கிறார் பினராயி விஜயன் பெரியாருக்கு எதிராக யாகம் நடத்திய மண்ணில் பெரியார் கொண்டாடப்படுவதுதான் சமூகநீதிக்குக் கிடைத்த வெற்றி. 100 ஆண்டுகளுக்கு முன்பிருந்ததைவிட தற்போது சமூக நீதியில் வெகுதூரம் வந்துள்ளோம். எல்லோரும் எல்லாம் என்பதை சமூகநீதிக் கொள்கையாக மட்டுமல்லாமல் ஆட்சியின் கொள்கையாகவும் தமிழகத்தில் கொண்டிருக்கிறோம்” என்றவர். வைக்கம் போராட்டத்தின நினைவுகளையும் பெரியாரின் சமூகநீதிச் சிந்தனைகளையும் பட்டியலிட்டார்.

**கேரள முதல்வர் உரை!**

கேரள மாநில முதலமைச்சர் பினராயி விஜயன் அவர்கள் உரையாற்றுகையில் தந்தை பெரியார் நினைவகம் திறப்பு விழாவில் தமிழ்நாடு மற்றும் கேரள மாநில அரசுகளின் ஒத்துழைப்பை நினைவுகூர்த்து, “ஒத்துழைப்பு என்பது வார்த்தைகளில் அல்ல, செயலில் வெளிப்படுகிறது. பொருளாதார சுயாட்சி உள்ளிட்ட மாநிலங்களின் உரிமைகள் மீது தொடர்ந்து அத்துமீறல் நடந்து வரும் இந்த நிலையில் மேலும் பல மாநிலங்களுக்கு இடையே இந்த ஒத்துழைப்பை விரிவுபடுத்த வேண்டும். வைக்கம் சத்தியாகிரகத்தில் எல்லை கடந்த சகவாழ்வையும் ஒத்துழைப்பையும் பார்த்தோம்.

கேரளாவும் தமிழகமும் அந்த சகவாழ்வையும் ஒத்துழைப்பையும் தொடர்கின்றன. தனிமனிதர்களின் சுயமரியாதைக்காக பெரியார் நின்றார் என்றால், நமது நாட்டின் சுயமரியாதைக்காக மாநிலங்கள் எழுந்து நிற்க வேண்டும் என்று காலம் கோருகிறது. காலம் கோரும் ஒத்துழைப்பை கேரளாவும் தமிழகமும் முன்னெடுத்துச் செல்லும் என்பதில் ஐயமில்லை” என்று குறிப்பிட்டார்.

விழாவில் இரண்டு மாநில முதலமைச்சர்களும் பேசிய உணர்வுமிக்க உரை, இந்தியா முழுமைக்கும் பெரியாரின் சமூக நீதியையும் தேவையையும் உணர்த்தின.

இந்த விழாவின் மூலம் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மலையாள மண்ணில் தந்தை பெரியார் அவர்களின் சமூக நீதித் தத்துவத்தை உயர்த்திப் பிடித்து திராவிட மாடலின் கம்பீரமாக எழுந்து உயர்ந்து நிற்கிறார் என்பதைக் கண்டு மகிழ்கிறது.



**வைக்கம் விருது வழங்கினார்!**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இந்த மாபெரும் விழாவில் 2024 ஆம் ஆண்டிற்கான வைக்கம் விருதினை கர்நாடக மாநிலம் மைசூரு மாவட்டதைச் சேர்ந்த எழுத்தாளரும், சமூக ஆர்வலருமான தேவநூர மஹாதேவா அவர்களுக்கு வழங்கி வாழ்த்துகள் கூறினார். இந்த விருது 5 இலட்சம் ரூபாய் ரொக்கத் தொகையும் தங்கப் பதக்கம், பாராட்டுச் சான்றிதழ் ஆகியவற்றையும் கொண்டதாகும்.

முதலமைச்சர் அவர்கள் வைக்கம் விழாவுக்காகக் கேரளா சென்றபோது அங்கு ஒரு தேநீர் கடைக்குச் சென்று மக்களோடு மக்களாகக் கூடி தேநீர் அருந்தினார்கள். இந்தக் காட்சியைப் பார்த்தவர்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் எளிய குணத்தைக் கண்டு மகிழ்ந்து பாராட்டினர்.

தந்தை பெரியார் நினைவகத்துடன் நூலகம் அமைந்திருப்பது இந்தப் பகுதி மக்களுக்கு, குறிப்பாக எங்களைப் போன்ற இளைஞர்களுக்குப் பெரிதும் உதவியாக அமைந்துள்ளது. இதற்காக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு எங்களுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம் என்று ஒரு மாணவி குறிப்பிட்டார்.

வைக்கம் நகரைச் சேர்ந்த ஒரு பெண், “பல நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக சாதி காரணமாக தீண்டாமை நெருப்பால் ஒடுக்கப்பட்டுவந்த மக்களுக்கு நூறு ஆண்டுகளுக்கு முன் தந்தை பெரியார், நாராயண குரு, வக்கீல் கேசவ மேனன், ஜார்ஜ் ஜோசப் முதலானோர் போராடி, சிறைசென்று விடுதலை பெற்றுத் தந்தனர். இவர்களில் முக்கியமான தமிழ்நாட்டைச் சேர்ந்த தந்தை பெரியார் அவர்கள் பெயரில் நினைவகமும், நூலகமும் அமைத்துத் தந்துள்ள முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அய்யா அவர்கள் இங்கே வந்து எங்கள் முதலமைச்சர் பினாரயி விஜயன் அவர்களோடு இணைந்து விழா நடத்துவது எங்களுக்கெல்லாம் மிகுந்த மகிழ்ச்சியை ஏற்படுத்துகிறது” என்று பாராட்டினார்.

இவ்வாறு அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.



ஒன்றியக்குழு உறுப்பினர்களுக்கு மாதாந்திர மதிப்பூதியம் வழங்குவதற்கு தமிழக முதல்வரிடம் கோரிக்கை வைக்கப்படும் என்று ரெட்டியார்சத்திரம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் ஐ.பெரியசாமி பேசினார்.

### ஒன்றியக்குழு உறுப்பினர்களுக்கு மாதாந்திர மதிப்பூதியம் வழங்குவதற்கு

# தமிழக முதல்வரிடம் கோரிக்கை வைக்கப்படும்!

## ரெட்டியார்சத்திரத்தில் அமைச்சர் ஐ.பெரியசாமி பேச்சு!

*திண்டுக்கல், டிச.16-*

ஒன்றியக்குழு உறுப்பினர் களுக்கு மாதாந்திர மதிப்பூதி யம் வழங்குவதற்கு தமிழக முதல்வரிடம் கோரிக்கை வைக்கப்படும் என்று ரெட் டியார்சத்திரம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் ஐ.பெரியசாமி பேசினார்.

திண்டுக்கல் மாவட்டம், ரெட்டியார்சத்திரம் ஊராட்சி ஒன்றிய அலுவல கத்திற்கு வருகை தந்த திமுக மாநில துணை பொதுச்செய லாளரும், ஊரக வளர்ச்சி துறை அமைச்சருமான ஐ.பெரியசாமி ஒன்றிய பெருந்தலைவர் ப.க.சிவகுரு சாமி, துணை பெருந்தலை வர் ராஜேஸ்வரி, ஒன்றியக் குழு உறுப்பினர்கள் எஸ்.ராஜ்மோகன், திருப்பதி, சுமதி கணேசன், நாகலட்சுமி ரமேஷ், காளீஸ்வரி மலைச் சாமி, மருதாயம்மாள், தமிழ்ச்செல்வி முத்துக் கிருஷ்ணன், ஜஸ்டின் மைக் கேலம்மாள், அமுதவள்ளி ஆறுமுகம், உட்பட ஒன்றி யக்குழு உறுப்பினர்களை சந் தித்து 5 வருடங்களாக வார்டுகளில் சிறப்பாக பணி யாற்றி மக்களுக்கான நலத் திட்டங்களை கேட்டு பெற்று அதை நிறைவேற்றிய அனைவருக்கும் வாழ்த்து தெரிவித்தார். உள்ளாட்சி மன்ற தேர்தல் நடைபெற்று 5 ஆண்டு காலம் நிறைவு பெறும் முன் உங்களை சந் தித்ததில் மகிழ்ச்சி என்றார். தொடர்ந்து நீங்கள் வரு கின்ற உள்ளாட்சி மன்ற தேர்தலில் ஒன்றியக்குழு உறுப்பினருக்கோ, மாவட்ட கவுன்சிலருக்கோ, ஊராட்சி மன்ற தலைவர் பதவிக்கு போட்டியிட்டு வெற்றி பெற்று மக்களுக்கான நலத் திட்ட பணிகளை தொடர்ந்து செய்ய வேண் டும் என்று வாழ்த்தினார். அப்போது ஒன்றியக்குழு உறுப்பினர்கள் ஊரக வளர்ச் சித்துறை அமைச்சர் ஐ.பெரி யசாமி அவர்களிடம் பேரூ ராட்சி, நகராட்சிகளில் வழங்குவது போது கூட்ட அமர்வு படியை உயர்த்த வேண்டும் என்றும், தொடர்ந்து மக்கள் நல பணி களில் ஈடுபட்டு வரும் ஒன்றி யக்குழு உறுப்பினர்களுக்கு மாதாந்திர மதிப்பூதியம் வழங்க வேண்டும் என கோரிக்கை விடுத்தனர்.

அப்போது அவர்கள் மத் தியில் பேசிய ஊரக வளர்ச் சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி பஞ்சாயத்து ராஜ் சட்டப்படி வழங்க இய லாது. அதனால் திராவிட மாடல் ஆட்சி நாயகர், மக்க ளுக்கான நல்லாட்சி செய்து வரும் கழகத்தலைவர் தமிழக முதல்வர் மு.க.ஸ்டா லின் அவர்களின் கவனத் திற்கு உங்கள் கோரிக்கையை கொண்டு செல்கிறேன். வரும் காலங்களில் அதற் கான நடவடிக்கை எடுக்கப் படும் என்றார்.

அப்போது அங்கிருந்த அ.தி.மு.க., கம்யூனிஸ்ட் கட் சியை சேர்ந்த ஒன்றியக்குழு உறுப்பினர்கள் ரெட்டியார் சத்திரம் ஒன்றியத்தை பொருத்த வரை பாகுபா டின்றி அனைத்து வார்டுக ளுக்கும் நலத்திட்ட உதவி கள் வழங்கியதற்காக அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களுக்கு நன்றி தெரி வித்து அவரிடம் வாழ்த்து பெற்றனர்.

நிகழ்ச்சியில் திண்டுக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. அவைத்தலைவர் வழக்கறி ஞர் காமாட்சி, பொருளா ளர் கு.சத்தியமூர்த்தி, வடக்கு ஒன்றிய செயலாளர் மணி, சட்டமன்ற உறுப்பி னர் முகாம் அலுவலக அலு வலர் வட்டார வளர்ச்சி அலுவலர் வடிவேல் முரு கன், அமைச்சரின் உதவியா ளர் ஹரிஹரன், கன்னிவாடி பேரூராட்சி மன்ற தலைவர் தனலெட்சுமி சண்முகம், கன்னிவாடி பேரூர் கழக செயலாளர் இளங்கோவன், முன்னாள் செயலாளர் வழக் கறிஞர் சண்முகம், மாவட்ட இளைஞர் நலன் மேம் பாட்டு அணி துணை அமைப்பாளர் பண்ணைப் பட்டி அருண் ஜெகநாதன், மாவட்ட தகவல் தொழில் நுட்ட அணி துணை அமைப் பாளர் பாறைப்பட்டி வாஞ் சிநாதன்,

திண்டுக்கல் மாமன்ற உறுப்பினர் நெல்லை சுபாஷ், ரெட்டியார்சத்திரம் நிலவள வங்கி முன்னாள் செயலாளர் சக்கரவர்த்தி மணிமாறன், ஊராட்சி மன் றதலைவர்கள் கோனூர் வெள்ளைத்தாய் தங்கபாண் டியன், அனுமந்தராயன் கோட்டை இன்பராஜ், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர்கள் ரமேஷ், பன்றிமலை முத்துக் கிருஷ்ணன், பொன்னிமாந் துரை அருளானந்து, மாவட்ட கவுன்சிலர் சுப்பு லெட்சுமி சண்முகம், பொறி யாளர் அணியை சேர்ந்த மலைச்சாமி,

ஒன்றியக்குழு உறுப்பினர் கள் எஸ்.ராஜ்மோகன், திருப் பதி, சுமதி கணேசன், நாக லட்சுமி ரமேஷ், காளீஸ்வரி மலைச்சாமி, மருதாயம் மாள், தமிழ்ச்செல்வி முத்துக் கிருஷ்ணன், ஜஸ்டின் மைக் கேலம்மாள், அமுதவள்ளி ஆறுமுகம், ராயப்ப ரமேஷ், மற்றும் மாணவரணி அமைப்பாளர் செல்வம், ஒன்றிய இலக்கிய அணி அமைப்பாளர் கோயில் கண் ணன், மாவட்ட பிரதிநிதி எல்லை.இராமகிருஷ்ணன், உட்பட தி.மு.க. நிர்வாகி கள் பலர் கலந்து கொண்ட னர்.

### தஞ்சை வடக்கு மாவட்டம், கும்பகோணம் மாநகர இளைஞர் அணி சார்பில்

# துணை முதல்வர் பிறந்தநாள் விழா - நலத்திட்ட உதவிகள்!

## அமைச்சர் கோவி.செழியன் - மாவட்டச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி. வழங்கினர்!

*தஞ்சாவூர், டிச.16-*

கும்பகோணம் மாநகர திமுக இளைஞரணி சார் பாக, தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலி னின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு, மாநகர துணை அமைப்பாளர் கோவி.அழகேசன் ஏற்பாட் டில், 47 கர்ப்பிணி பெண்க ளுக்கு வளைகாப்பு நடத்தி யும், 47 பள்ளி மாணவ மாணவியர்களுக்கு கல்வி உபகரணங்களுடன் புத்தக பையும் உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகளும் வழங்கியதுடன் அனைவருக் கும் அறுசுவை மதிய உண வும் பரிமாறி கொண்டாடப் பட்டது.

தமிழ்நாடு துணை முதல் வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை கும்பகோணம் மாநகர திமுக இளைஞரணி சார்பில், மாந கர துணை அமைப்பாளர் கோவி.அழகேசன் ஏற்பாட் டில், பச்சையப்பா தெருவில் அமைந்துள்ள பாலாஜி மஹாலில் கும்பகோணம் மாநகர திமுக செயலாளரும், துணை மேயருமான சு.ப.தமிழழகன் தலைமை யில் ஆயிரம் நபர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங் கும் விழா நடைபெற்றது. இதில் உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன், மாவட் டச் செயலாளர் சு.கல்யாண சுந்தரம் எம்.பி முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் செ.இராமலிங்கம், கும்ப கோணம் சட்டமன்ற உறுப் பினர் சாக்கோட்டை க.அன் பழகன் ஆகியோர் நலத் திட்ட உதவிகளை வழங்கி னர். தொடர்ந்து நடை பெற்ற நிகழ்ச்சியில் முதலில், பள்ளி மாணவ மாணவியர் கள் 47 பேருக்கு கல்வி உபக ரணங்களுடன் புத்தகப்பை யும், தொடர்ந்து 47 ஆட்டோ ஓட்டுநர்களுக்கு சீருடை வழங்கப்பட்டது. பிறகு, 47 கர்ப்பிணி பெண்க ளுக்கு மலர் மாலை அணி வித்து, கையில் கண்ணாடி வளையல்கள் அணிவித்து, சந்தனம் பூசி, நலுங்கு வைத்து, ஆசிர்வாத திலக மிட்டு, வளைகாப்பு நடத்தி அவர்களுக்கு சீர்வரிசை பொருட்கள் வழங்கப்பட் டது.

இதனைத்தொடர்ந்து கண் தானம் செய்ய பதிவு செய்த 47 நபர்களை பாராட்டி சான்றிதழ் வழங் கப்பட்டது. பின்னர் தூய்மை காவலர்கள் 200 பேருக்கு நலத்திட்ட உதவி கள் வழங்கப்பட்டதுடன், விழாவில் பங்கேற்ற அனை வருக்கும் அறுசுவை மதிய உணவும் பரிமாறப்பட்டது.

இந்நிகழ்வில், மாநகர திமுக நிர்வாகிகள், இளைஞ ரணியினர் உள்ளிட்ட அனைத்து சார்பு அணி நிர் வாகிகளும், மாநகராட்சி மண்டல தலைவர்கள் மற் றும் மாமன்ற உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளையொட்டி தருமபுரி மேற்கு மாவட்டம் காரிமங்கலம் மேற்கு ஒன்றிய கழக செயலாளர் வழக்கறிஞர்.எம்வீடி.கோபால் ஏற்பாட்டில் தருமபுரி மேற்கு மாவட்ட கழக செயலாளர் முனைவர்.பி. பழனியப்பன் 500க்கும் மேற்பட்டோருக்கு வேட்டி,சேலை மற்றும் உணவுப் பொருட்கள் உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் மாநில விவசாய அணி துணைச்செயலாளர் சூடப்பட்டி சுப்பிரமணி,பாலக்கோடு சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர் அரியப்பன், ஒன்றிய செயலாளர் இல.கிருஷ்ணன்,மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் சந்திரசேகர் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.